



அரியலூர் மாவட்டக் கழகம் சார்பில் ஆண்டிமடத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தளபதி அன்பகம், ஆண்டிமடம் ஒன்றிய கழக அலுவலகம் கட்டிடங்கள், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் முழுவுருவச் சிலையை கழக இளைஞ ரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தகுமார், ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### ஆண்டிமடத்தில் ‘தளபதி அன்பகம்’ – ஒன்றியக் கழகக் கட்டிடம்

# பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

அரியலூர்,மார்ச், 13–

அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் ஆண்டிமடத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ‘தளபதி அன்பகம்’ ஆண்டிமடம் ஒன்றிய கழக அலுவலக கட்டிடங்கள், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் முழு திருவுருவச் சிலைகளைத் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து அங்கு அமைக்கப் பட்ட 100 அடி கழகக் இருவண்ணக் கொடியினை ஏற்றிச் சிறப்பித்தார்.

தளபதி அன்பகத்தில், தலைவர் கலைஞர் படிப்பகம் மற்றும் ஆண்டிமடம் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களுக்கான அலுவலகங்களும் செயல்படத் தொடங்கியுள்ளது.

அரியலூர் மாவட்டக் கழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும் இந்த மாபெரும் விழாக்களில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்ததனர்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது நெஞ் சார்ந்த நன்றியினை தெரிவித்தார்.

இம்மாபெரும் விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க. கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் அன்பரசு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஆர்.கலியபெருமாள், செந்தில்குமார், தனசேகர், இரா.கென்னடி, இரா.அண்ணாதுரை, மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, இரா. மணிமாறன், பூ.செல்வ ராஜ், வி. எழில்மாறன்,

தனவேல், நா.கணேசன், தெய்வ.இளையராஜா, ஏ.ஜி.எஸ்.முருகன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், பொதுக்குழு உறுப்பினர் கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம்.ஷாஜகான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண்ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டேவிட், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், வீர.சிவா, ச. வசந்தபகலவன், குணசீலன்,தமிழ்மாறன், ஆண்டிமடம் கிழக்கு ஒன்றிய மேற்பார்வையாளர் கு.பிரபா கரன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் , பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.




### கொங்கு பகுதியில் மட்டுமல்ல - 1996-ஆம் ஆண்டு வெற்றி போல் 2026-ஆம் ஆண்டும் வெற்றி பெறுவோம்!

# இரண்டாவது முறையாக மு.க.ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பேற்பது உறுதி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேட்டி!

திருப்பூர், மார்ச் 13-

கொங்கு பகுதியில் மட்டுமல்ல; 1996ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியைப் போல் 2026ம் ஆண்டும் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்பது உறுதி என்று கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் கூறினார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 07.03.2026 சனிக்கிழமை அன்று பொதுப் பணித்துறை சார்பில் ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் மாவட்ட மைய நூலகக் கட்டடம் தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் 18212.69 சதுர அடி பரப்பளவில் தரை தளம் 5963.21 சதுர அடி பரப்பளவில் குழந்தைகள் பகுதி, குழந்தைகள் காணொலி பகுதி, செய்தித்தாள் பகுதி, மாற்றுத்திறனாளிகள் பகுதி, மூத்த குடிமக்கள் பிரிவு, நாளிதழ் பருவ இதழ் பிரிவு, பாதுகாப்பு பெட்டகப் பகுதிகளுடனும், முதல் தளம் 5252.79 சதுர அடி பரப்பளவில் நகலிடும் பகுதி, ஆங்கில நூலகப் பகுதி, தமிழ் நூலகப் பகுதி, வைப்பு அறைகளுடனும் இரண்டாம் தளம் 4962.16 சதுர அடி பரப்பளவில் குடிமைப்பணி பிரிவு, போட்டித் தேர்வுக்கு படிக்கும் பிரிவு, இணையதள வசதிகளுடனும், மூன்றாம் தளம் 2034.78 சதுர அடி பரப்பளவில் சிறு கூட்ட அரங்கு வசதிகளுடன் கூடிய கட்டடம் மற்றும் அவிநாசி அரசு மருத்துவமனையில் ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சித்தா பிரிவு கட்டடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.9.27 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் ந.தினேஷ் குமார், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்ம நாபன் ஆகியோர் முன்னிலை யில் துவக்கி வைத்தார்.

அமைச்சர் கூறியதாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்ககூடிய திட்டப் பணிகள் அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு நிகழ்ச்சிக்கு வந்திருந்த பொழுது திருப்பூரிலே ஒரு நூலகம் தேவை என்று கோரிக்கை வைத்தார்கள், அதை ஏற்றுக்கொண்டு அந்த அரசு விழாவிலேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்பூரிலே நூலகம் ஒன்று அமைக்கப் படும் என்று சொல்லி அறிவித்தார்கள்.

கேஸ் சிலிண்டர் விலை அதிகமாகி இருக்கு, தேர்தல் அறிக்கையில் சிலிண்டருக்கு 100 மானியம் கொடுப்போம் என்று சொன்னார்கள், தமிழ்நாடு அரசு அதை இப்பவாவது கொடுக்கணும் என அண்ணாமலை சொல்லியிருக்காரு? உங்கள் கருத்து,

கேஸ் விலை, பெட்ரோல், டீசல் விலை எல்லாம் ஒன்றிய அரசுடைய கட்டுப்பாட்டில் இருக்கக் கூடியது, அதை அவர் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், நிச்சயமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய வகையிலே எதிர்காலத்திலும் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

அ.தி.மு.க. பொதுக் கூட்டங்களில் கொங்கு மண்டலத்திலே அ.தி.மு.க. பெரும்பான்மை இடங்கள் பிடிக்கும் என்று பேசுறாங்க?

அவங்க சொன்னதுக்கெல்லாம் ரிசல்ட் கொடுக்க முடியாது, மக்கள் ஓட்டுப் போடணும், அது மக்கள் ஓட்டுப் போட்ட பிறகு வாக்கு எண்ணிக்கை முடிஞ்ச பிறகு அந்த டயலாக் எல்லாம் நிச்சயமாக அழிந்து போவதற்கான வாய்ப்பு உள்ளது. திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி மகத்தான வெற்றியை பெறும், நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கிறோம், அதே போல பல்வேறு தேர்தல்களில் கொங்கு பகுதியில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கிறோம், இப்படி பல்வேறு விதத்திலே தேர்தலில் வெற்றி வாய்ப்பு பெற்றிருக்கிறது. எனவே உள்ளாட்சி தேர்தல்களிலும் பல்வேறு இடங்களில் பெரும்பான்மையான வெற்றி பெற்றிருக்கிறோம். எனவே நிச்சயமாக வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அனைத்து இடங்களிலும், நம்முடைய கொங்கு பகுதியில் மட்டுமல்ல; 1996ம் ஆண்டுக்கான தேர்தல் முடிவு எப்படி வந்ததோ, அதே போல 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றி என்பது நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்கு சாதகமாக அமையும், இரண்டாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்பது உறுதி என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் தம்பி ஆர். கோவிந்தராஜ் (2ம் மண்டலம்), வெ.உமா மகேஸ்வரி (1ம் மண்டலம்), பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் முத்துசரவணன், உதவி செயற்பொறியாளர் விஜயலட்சுமி, உதவி பொறியாளர் விஜய பிரகாஷ், மாவட்ட நூலக அலுவலர் ராஜன், பகுதி கழக பொறுப்பாளர் மு. நந்தகோபால், திருப்பூர் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் விஸ்வநாதன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு சடையம்பாளையம், வள்ளிபுரத்தான் பாளையம், மேட்டுக்கடை பகுதிகளில் உள்ள பொது மக்கள், பள்ளி மாணவ, மாணவியரின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய வழி தட பேருந்து வேண்டிய கோரிக்கையை ஏற்று ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து புதிய வழித்தடத்திற்கான பேருந்தினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், சென்னிமலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.செங்கோட்டையன், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், காயத்ரி இளங்கோவன்,கதிரம்பட்டி மகாலிங்கம், ரகு,போக்குவரத்து கழகத் துறை அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.